**O.S.No.27/2018** **தேதி – 02.02.2026**

**பி.வா.சா.1. – பவுன்ராஜ்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் எம்.எஸ்.சி, எம்.எட் படித்து, தலைமை ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். வாதியின் கணவர் தலைமையாசிரியராக இருந்து விருப்ப ஓய்வில் சென்று விட்டார் என்றால் சரிதான். நானும், வாதியின் கணவரும் நீண்ட கால நண்பர் என்றால் நண்பர்கள் ஆவோம். நான் எனது நிருபண அபிடவிட்டில் வாதியின் கணவர் சட்டத்திற்கு புறம்பாக வீடுகட்டியுள்ளதாக சொல்லியுள்ளேனா என்ற சொல்லியுள்ளேன். வாதியின் கணவர் சட்டத்திற்கு புறம்பாக வீடுகட்டியதற்கு இந்நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளரா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதிக்கு சொந்தமான வீட்டை நான் கிரையம் வாங்கி, அது சம்பந்தமாக அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளின்படி அசையும், அசையா சொத்துக்கள் கிரையம் பெறுவதற்காக உயர் அதிகாரியிடம் முன்அனுமதி பெற்றுள்ளேனா என்றால் நான் பெறவில்லை. நான் அரசு உதவி பெறும் பள்ளி என்பதால் அரசு விதிகளை முழுவதுமாக கடைப்பிடிப்பதில்லை. தனியார் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு நடத்தை விதிகளில் விலக்கு எதுவும் தனியாக குறிப்பிடவில்லை. கிரையம் வாங்கிய இடத்தில் வாதியின் வீட்டிற்கு கீழ் புறத்தில் உள்ள 1/2 செண்ட் நிலத்திற்குண்டான நிலத்திற்கு பிரச்சைனையை குறிப்பிட்டு, வழக்குரைஞர் அறிவிப்போ, உரிமையியல் வழக்கோ தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 21.10.2013 அன்று ஒரு புரோட்டில் ஒரு கையெழுத்து செய்துள்ளேன். அது என்னுடையதுதான். புரோநோட்டானது கிரைய பாக்கித் தொகைக்காக செக்யூரட்டிக்காக எழுதப்பட்டது என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். வா.சாஆ.1 புரோட்டின் பின்பகுதியில் உள்ள கையெழுத்து என் கையெழுத்து இல்லை. மேற்படி விபரத்தினை நான்

அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமான வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் 12.06.2013 ம் தேதியிட்ட மேற்குறிப்பு, கையெழுத்து மறுப்பு சொல்லியுள்ளேனா என்றால் பதில் அறிவிப்பில் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணமான 2013-2014 ம் ஆண்டிற்கான சுற்றறிக்கை பதிவேடு சம்பந்தமாக எங்களது கமிட்டியில் முறையாக அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 2013-2014 கல்வியறிக்கை சுற்றறிக்கை பதிவேடு என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி சுற்றறிக்கையில் 2 வது பக்கத்தில் 2014-2015 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சுற்றறிக்கையானது பள்ளியின் உள்நிர்வாக பயன்பாட்டிற்காக எழுதப்பட்ட ஆவணம் என்று எனது நிருபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்னர் நான் எந்தவித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சாஆ.2 ஆவணமான பிராமிசரி புரோநோட்டு சம்பந்தமாக காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் தாவா புரோநோட்டு சம்பந்தமாக வாதிக்கு எவ்வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்பாக மேற்படி புரோநோட்டு சம்பந்தமாக காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 12.06.2016 ம் தேதிய தாவா புரோநோட்டின் பின்பகுதியில் வட்டி வகைக்காக ரூபாய் 50 ஆயிரம் கொடுத்து வரவு வைத்து அதில் நான் சாட்சியம் முன்னிலையில் கையெழுத்து செய்துள்ளது குறித்து காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணமாக நான் தாக்கல் செய்த ஆவணம் வங்கியின் ஸ்டேட்மெண்ட் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வங்கியின் ஸ்டேட்மெண்ட்

ஆவணத்தில் 3 காசோலையில் ஜீப்ளிக்கு ஒரு காசோலையும், நாகராஜனுக்கு 2 காசோலைகள் மூலமாக பணம் செலுத்தியதாக கூறும் நிலையில் அவர்களுடைய கணக்கு எண் போன்ற விபரங்கள் ஆவணத்தில் காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வங்கியில் எந்த அலுவலரிம் இருந்து நான் குறிப்பாக பெற்றேன் என்பது குறித்து விபரங்கள் இல்லை என்றால் சரிதான். ஆனால் அது வங்கியில் இருந்துதான் பெறப்பட்டது. 3 காசோலைக்கான பணம் ரூ.10 லட்சத்தை பெற்றுக் கொண்டு, என்னை மீண்டும் மீண்டும் மிரட்டுவதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 08.07.2015ம் தேதிய ராஜபாளையம் ஐ.டி.பி வங்கி காசோலை எண்.68688—ரூ.4 லட்சம், காசோலை எண்.68689—ரூ. 4 லட்சம், காசோலை எண்.68690— ரூ.2 லட்சம் ஆக மொத்தம் ரூபாய் 10 லட்சம் செலுத்தி விட்டதாக எனது நிரூபண அபிடவிட்டில் சொல்லியுள்ளது குறித்து வாதிக்கோ, வாதியின் கணவர் நாகராஜனுக்கோ கடிதம் எதுவும் அனுப்பினேனா என்றால் கடிதம் எதுவும் அனுப்பவில்லை. காசோலையில் உள்ள பணம் அனுப்பியது குறித்து வாதிக்கோ, வாதியின் கணவருக்கோ கடிதமோ, வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பினேனா என்றால் கடிதம், வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிரையத் தொகையாக ரூ.25 லட்சம் என்ற பத்திரப்பதிவு செய்திருந்தேன் என்றால் சரிதான். பிவா.சா.ஆ.1 ஆவணமான கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் ரூ.25 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண அபிடவிட்டில் ரூ.41 லட்சத்திற்கு கிரையம் பேசியது உண்மையல்ல என்றால் அது தவறு. எனது மனைவி மேரி புஷ்பராணி சத்திரப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். எனக்கு தென்காசி மாவட்டம், கரிவலம்வந்தநல்லூர் தாலுகா, மாங்குடி கிராமத்தில் சொந்த வீடு உள்ளது

என்றால் சரிதான். மாங்குடி கிராமத்தில் உள்ள சொந்த வீடு எனது வருமான வரி கணக்கிற்கு உட்பட்டு நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் வாங்கிய சொத்து, மாங்குடியில் உள்ள வீடு அனைத்தும் வருமான வரிக்கு உட்பட்டு கிடைக்கப்பெற்ற பணத்தில் வாங்கினேன் என்று சொன்னால் வங்கியில் கடன் பெற்று வாங்கினேன். வங்கியில் கடன் பெற்று வாங்கிய விபரம் சம்பந்தமாக எனது நிரூபண அபிடவிட்டிலும், எதிர் வழக்குரையிலும் சொல்லவில்லை. ஆனால் ஆவணத்தில் உள்ளது. அதற்கு ஆவணமும் உள்ளது. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தை வரைவு செய்தவர் எம்.லட்சுமணன், ஆவண எழுத்தர், முகவூர் என்று உள்ளது என்றால் சரிதான். ரூ.100 க்கு மேல் சொத்தை பொறுத்து பரிவர்த்தனை நடைபெற்றால் அதை உரிய அலுவலகத்தில் உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கை பத்திரத்தை உரிய அலுவலகத்தில் பதியவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 சுற்றறிக்கையின் உண்மை விபரத்தை தெரிந்து கொள்வதற்கு தாளாளரை விசாரித்தால்தான் தெரிய வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை பொறுத்து வங்கியின் அலுவலரை விசாரித்தால்தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்ன விபரங்களின் அடிப்படையில் தான் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு தயார் செய்யப் பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண அபிடவிட்டு, எதிர் வழக்குரை, சுற்றறிக்கை, புரோநோட்டு ஆகியவைகளில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தும், பி.வா.சாஆ.1, 2 ஆகியவைகளில் உள்ள கையெழுத்தும், வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்தும் வெவ்வேறானவை என்று நிருபிப்பதற்கு கையெழுத்து நிபுனருக்கு அனுப்ப தற்போதுவரை எந்தவித ஒப்பீடு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கையெழுத்தை ஒப்பிட்டு பார்த்தால் வா.சா.ஆ.2 ல் உள்ள என்னுடைய கையெழுத்துதான் என்று

தெரியவரும் என்றால் அது தவறு. நான் அவ்வாறு மனு செய்திருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் நான் மனு தாக்கல் செய்வதை தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 23.10.2013 ம் தேதி வாதியிடம் சட்டப்படி வாங்கிய கடனுக்கு ஈடாகத்தான் புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சட்டப்படி கடனாக வாங்கவில்லை. வீடு வாங்கிய வகைக்கு மேற்படி புரோநோட்டை எழுதிக் கொடுத்தேன். வா.சா.ஆ.1 புரோநோட்டில் வீடு வாங்கிய வகைக்கு புரோநோட்டு என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 22.12.2016 ம் தேதியிட்டு வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் வீடு வாங்கிய வகைக்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சட்டப்படி வாங்கிய கடனுக்காகத்தான் வா.சா.ஆ.1, 2 ல் கையெழுத்து செய்தேன் என்றும், தற்போது வாங்கிய கடனை திருப்பி செலுத்தக் கூடாது என்பதற்கு வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்தை நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்குரையில் கோரிய தொகை வட்டியோடு கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.<br><br>முதன்மை மாவட்ட நீதிபதி,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். |